<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண். 236/2019</u>

**2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09–ம் நாள் வெள்ளிக் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி.S. இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : நடேசபடையாச்சி | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : வி.களத்தூர் | சமயம் | : |
| சாதி | : | வயது | : 71/2024 |

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) எனக்கு எழுதபடிக்க தெரியும். நான் Old SSLC படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. வழக்கு தொடர்பான விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். வழக்கு விவரங்களை தெரிந்துகொண்டு தான் வழக்குரையில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தந்தை ராணுவ வீரர் 1964 ம் வருடம் எனது தந்தைக்கு வீடு, 5 ஏக்கர் நிலம் ஆகியவை முன்னாள் படைவீர நலத்துறையால் கொடுக்கப்பட்டு அதனை எனது தந்தை அனுபவித்து வந்தார். யூடிஆர் திட்டத்தின் போது மூக்கபிள்ளை உடையார் மாரிமுத்து ஆகிய பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி நிலம் எனக்குரியது என்று விளம்ப கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை பெயருக்கு தாவா சொத்து வழங்கப்பட்டது என்பதற்கு ஆதாரமாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(ii) எனது தந்தை எந்த காலகட்டத்தில் ராணுவ வீரராக இருந்தார் என்றால் 1946 ம் ஆண்டு ராணுவத்தில் சேர்ந்தார். எனது அப்பா ராணுவத்தில் இருந்தார் என்பதற்கு அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். முன்னாள் ராணுவ வீரர்கள் அரசு பொறும்போக்கு நிலங்களை அனுபவம் செய்து பட்டா செய்துகொள்ளலாம் என்பதற்கு வழிவகை செய்யும் அரசாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மூக்கபிள்ளையும், மாரிமுத்துவும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். அவர்களது செங்கமலை உடையார் என்றால் சரிதான். செங்கமலை உடையார் அப்பா பெயர் ராயமுத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண்

தெரியுமா என்றால் 89/1 A  2 ஏக்கர் 26 செண்ட் ஆகும். சர்வே எண். 89/1A எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 1927 ம் ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது. ச.எண்.89/1 ஆனது 4 ஏக்கர் 26 செண்ட் ஆகும். 89/1A தரிசு நிலமாகும். 89/1B, 89/1c பூமிதான நிலமாகும். 1927 ம் ஆண்டு செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(iii) வா.சா.ஆ.3 ஆவணம் செட்டில்மெண்ட் ஆவணமே அல்ல என்றாலும் அது வேறு வடிவில் இருக்கும் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தை பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெற்றேன். செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் ஆவணம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மட்டுமே என்றாலும் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் 2 ம் வாதி முத்தம்மாளுக்கும் எவ்வித கருத்துவேறுபாடும் இருந்தது இல்லை என்றால் சரிதான். முத்தம்மாள் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்த போது நான் உடன் சென்றிருந்தேன் என்றாலும் அதுபற்றி விவரம் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள உத்தரவு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தாயாரிடம் மேற்படி உத்தரவை நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தில் தாவா சொத்தானது அரசாங்க நிலம் அல்ல என்றாலும், தனியாருக்கு சொந்தமானது என்றும் அதனால் வாதிகளுக்கு பட்டா ஏற்படுத்தி தரமுடியாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

மேற்படி உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்தோம் என்றால் செய்தோம். மேல்முறையீட்டு உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மேல்முறையீட்டிலும் தள்ளுபடி செய்து தான் உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடிகொள்ள உத்தரவிடப்பட்டிருந்தது. பின்னிட்டு 2008 ம் ஆண்டு  தாவா சொத்திற்கு பட்டா கோரி மனு செய்திருந்தேன் என்றால் சரிதான். அதன்மீதான உத்தரவும் தள்ளுபடி செய்யபப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி விவரங்களை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.